செ.வெ.எண் : 64

நாள்: 21.1.2011

தகவல் தொழில் நுட்பவியல் துறை

## செய்தி வெளியீடு

### ஒசூர் – விசுவநாதபுரம் மற்றும் சேலம் ஜாகீர் அம்மாபாளையம் தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் , தகவல் தொழில் நுட்ப / தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு.

தமிழகத்திலுள்ள இரண்டாம் நிலை நகரங்களான திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் தகவல் தொழில் நுட்பவியலை பெரிய அளவில் புகுத்திட தமிழக அரசு தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களை முனைப்புடன் உருவாக்கி வருகிறது. எல்காட் நிறுவனம் ஒசூர் – விசுவநாதபுரம் ( 174.47 ஏக்கர்) மற்றும் சேலம் ஜாகீர் அம்மாபாளையம் ( 164.26 ஏக்கர்) கிராமங்களில் தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது.

### ஒசூர் – விசுவநாதபுரம் தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம்

இந்த சிறப்பு பொருளாதார மண்டலத்தில் எல்காட் நிறுவனத்தின் முதலீடு ரூ.48 கோடியாகும். இதில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.24 கோடியில் உருவாக்கப்பட்டு வருகிறது. எல்காட் நிறுவனம் 50,000 சதுரடியில் தகவல் தொழில் நுட்ப கட்டிடப் பணிகளை ரூ.13.74 கோடியில் உருவாக்கி வருகிறது. எல்காட் நிறுவனம் கீழ்க்கண்ட தகவல் தொழில் நுட்ப / தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு செய்துள்ளது:–

திருவாளர்கள்:

1. ஒகாயா இன்போகாம் பிரைவேட் லிமிடெட், புது தில்லி -- 10 ஏக்கர்
2. தேஜாஸ் நெட்வொர்க் லிமிடெட், பெங்களூர் -- 5 ஏக்கர்
3. அசெண்ட் சர்க்யூட்ஸ் பிரைவேட் லிமிடெட் , ஒசூர் -- 5 ஏக்கர்
4. சி ஆர் எம் ஐடி சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூர் -- 3 ஏக்கர்
5. சி ஆர் எம் இன்போடெக் இந்தியா பிரைவேட் லிமிடெட், பெங்களூர்-- 2 ஏக்கர்
6 .நூஸ் இன்போ சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், பெங்களூர் -- 2 ஏக்கர்

இந்த எல்காட் ஒசூர் – விசுவநாதபுரம், தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் 50,000 நபர்களுக்கு நேர்முக வேலைவாய்ப்பையும் மற்றும் 1,00,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தும். அடுத்து 5 ஆண்டு காலத்தில் இந்த தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ரூ.2,000 கோடி முதலீடு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**<u>சேலம் - ஜாகீர் அம்மாபாளையம் தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம்</u>**

இந்த சிறப்பு பொருளாதார மண்டலத்தில், எல்காட் நிறுவனத்தின் முதலீடு ரூ.33 கோடியாகும். இதில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.9.43 கோடியில் உருவாக்கப்பட்டு வருகிறது. எல்காட் நிறுவனம் தகவல் தொழில் நுட்ப / தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களான திருவாளர்கள் மகிமா டெக்னாலாஜி பிரைவேட் லிமிடெட், சேலம் - 3 ஏக்கர் நிலமும் மற்றும் ஜி.டி.பி. இன்போடெக் சொல்யூஷன்ஸ் லிமிடெட், சென்னை – 2.5 ஏக்கர் நிலமும் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் நில ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த எல்காட் சேலம் - ஜாகீர் அம்மாபாளையம் தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் 10,000 நபர்களுக்கு நேர்முக வேலைவாய்ப்பையும் மற்றும் 20,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தும். அடுத்து 5 ஆண்டு காலத்தில் இந்த தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ரூ.800 கோடி முதலீடு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சர் திருமதி டாக்டர். பூங்கோதை ஆலடி அருணா நில ஒதுக்கீடு ஆணைகளை ஒதுக்கீடு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு தலைமைச் செயலகத்தில் வழங்கினார். அப்போழுது திரு.பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., முதன்மைச் செயலர் தகவல் தொழில் நுட்பவியல் துறை மற்றும் டாக்டர். சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர், எல்காட் நிறுவனம் ஆகியோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு, இயக்குநர்,**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**சென்னை-9**

2/2

PTR NO: 64

Date: 21.1.2011

# PRESS RELEASE

Information Technology Department

## LAND ALLOTMENT TO IT/ITES COMPANIES IN HOSUR-VISWANATHAPURAM AND SALEM-JAGIRAMMAPALAYAM IT SEZs

In a major effort to bring IT into tier II cities, Government of Tamil Nadu has been developing IT SEZs in some of the major cities in Tamil Nadu such as Trichy, Madurai, Tirunelveli, Coimbatore, Salem and Hosur. In Hosur, ELCOT has developed an IT/ITES SEZ Park in Viswanathapuram Village – (174.47 acres) and Jagirammapalayam Village-Salem (164.26 acres).

**Hosur- Viswanathapuram IT SEZ:**

ELCOT's investment in this IT SEZ is about Rs.48 crores and the infrastructure facilities is under progress at an estimated cost of Rs. 24 crores. ELCOT is also constructing an IT Building of 50,000 sq.ft. in this IT SEZ at an estimated cost of Rs. 13.74 crores. ELCOT has allotted lands to the following IT/ITES Companies in this IT SEZ for their IT/ITES business:

1. M/s. Okaya Infocom Pvt. Ltd., New Delhi ---- 10 acres
2. M/s. Thejas Network Limited, Bangalore ---- 5 acres
3. M/s. Ascent Circuits Pvt. Limited, Hosur ---- 5 acres
4. M/s. CRM IT Solutions Pvt. Limited, Bangalore ---- 3 acres
5. M/s. CRM Infotek India Pvt. Limited, Bangalore ---- 2 acres
6. M/s. Nous Infosystems Pvt. Limited, Bangalore ---- 2 acres

This ELCOT Hosur-Viswanathapuram IT SEZ will provide direct employment to about 50,000 people and indirect employment to about 1,00,000 people in the next 5 years period . Rs. 2000 crores investment is expected in this IT SEZ.

**Salem-Jagirammpalayam IT SEZ:**

ELCOT's investment in this IT SEZ is about Rs.33 crores and the infrastructure facilities work is under progress at an estimated cost of Rs. 9.43 crores.

ELCOT has already allotted 3 acres of land to M/s.dB Professionals and 3 acres of land to M/s.Vee Technologies in this IT SEZ. Now ELCOT is allotting 3 acres of land to M/s. Mahima Technology Pvt. Limited, Salem and 2.5 acres to M/s. GTP Infotech Solutions Limited, Chennai in this IT SEZ for their IT/ITES business.

This ELCOT Salem-Jagirammapalayam IT SEZ will provide direct employment to about 10,000 people and indirect employment to about 20,000 people in the next 5 years period. Rs. 800 crores investment is expected in this IT SEZ.

The Honorable Minister of Information Technology, Government of Tamil Nadu Dr.Poongothai Aladi Aruna gave away the allotment orders to the allottees in the presence of Thiru P.W.C. Davidar, I.A.S, Prinicipal Secretary, Information Technology Department and Dr.Santosh Babu, I.A.S., Managing Director ELCOT at the Secretariat Complex.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை